
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed - Journal Multidisilinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :25 January 2025*

கோட்டை:7 வாயில்:25 ஜனவரி 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்


அகப்பொருள் மரபுகளின் பொருண்மைகள்
தெ.மதுபாலா

தற்காலப் பயன்பாட்டில் தன்மை வினைமுற்றுச் சொற்கள்
கோ. கோகிலா

தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியர்கள் சிறந்த ஆசிரியர்கள்
முனைவர்.வி.சேகர்

ஐங்குறுநூற்றில் மருத நில வாழ்வியல் கோட்பாடு
கோ. கோகிலா

ஐங்குறுநூற்று மருதத்திணையில் "வேட்கைப் பத்து" வெளிப்படுத்தும் செய்திகள்
த.கல்பனா

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தோழியின் உளவியல் கூறுகள்
கு.கலையரசி

ஆற்றுப்படை இலக்கியத்தில் ஐந்திணைசார் உணவுகள்
மு.கௌசல்யா

சங்க இலக்கியங்களில் சமூக உறவுகள்
முனைவர் வெ. நளினி

பறம்பு மக்களின் பரந்த வாழ்வியல்
வீ. மஞ்சு

குறுநில மன்னா ் களின் பொருளாதாரநிலை
மு. சதீஸ்குமார்

கம்பராமாயணம் காட்டும் வாலிவதைப்படலம்
மு.கனகவள்ளி

காப்பியங்களில் மரபுக்கருவிகள்
வீ.விஜயலட்சுமி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இஸ்லாமிய சூஃபித்துவமும் சடங்கு முறைகளும்**
முனைவர் சா.இன்குலாப்

**தேவிபாரதியின் "உயிர்த்தெழுதலின் சாபம்" சிறுகதையில் பெண்மன நிலைபாடு**
S.Priyadharshini

**விமணியின் குழந்தைச் செல்வம் படைப்பு - ஒரு பார்வை**
முனைவர் கு.புஷ்பாவதி

**அண்ணாவின் நாடகப் பனுவல்கள் மற்றும் நிகழ்த்துகைகளில் அவரது மறுமலர்ச்சி விடுதலை அரசியல் அரங்கு ஓர் ஆய்வு.**
திரு.கு.ரவிச்சந்திரன்

**பாரதிதாசனின் பெண்ணுலகம்**
கா. கவிதா

**பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்**
நா.ரஹமத் நிஷா

**“தோட்டியின் மகன்” நாவல் காட்டும் துப்புரவு தொழிலாளர்களின் வாழ்வியல் நிலை**
மு. வசந்தி

**நூற்றாண்டு கண்ட எழுத்தாளுமை இராஜம் கிருஷ்ணன்-பெண்ணின் குரலாய்**
முனைவர் ப.விமலா அண்ணாதுரை

**கே.ஆர்.மீராவின் புதினங்களில் வெளிப்படும் பெண்மொழி**
நா.சௌந்தர்யா

**Creating Virtual Platforms to Showcase Undergraduates' Artworks**
1.Yasanthini, G.F



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் அரசன்**
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

**Lakśana and Lakśya in Music**
Srivaramangai Sadagopan

**சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்**
ச. காயத்ரி தேவி

**Importance of Sāhityam and the Influence of the Great composers in the musical compositions**
Ms. Janaki Sadagopan

**தெலுங்கும் தமிழும் தித்திக்கும் கலைவடிவம் பாகவதமேளா ஓர் ஆய்வுநோக்கு**
கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்

**தமிழ்நாட்டின் மரபுவழி நிகழ்த்துகலையான தெருக்கூத்து**
கலாநிதி. ஷார்மிலளா றஞ்சித்குமார்

**திருமந்திரத்தில் காணப்படும் உடல்சார் கருத்துகள் நவீன அறிவியல் பார்வை**
பேராசிரியர் முனைவர் சு.ஹரிபிரசாத்



அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி



# இசையும் நடனமும்

# சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்

## *The Essence of the Bhagavad Gita in the Musical Compositions of Sadasiva Brahmendra*

**ச. காயத்ரி தேவி**

ஆய்வாளர்

அரசு இசை கல்லூரி

திருவையாறு, தஞ்சாவூர்

**முனைவர். ப. உமா மஹேஸ்வரி**

ஆய்வு நெறியாளர்

அரசு இசை கல்லூரி

திருவையாறு, தஞ்சாவூர்

*S. Gayathri Devi | Research Student | Government Music College | Thirivayaru, Thanjavur| Orcid ID: 0009-0000-9486-7323*

*Dr. P. Uma Maheswari | Research Guide, Retired Principal | Government Music College | Thirivayaru, Thanjavur |*

**ஆய்வுச் சுருக்கம்**

சதாசிவ ப்ரம்மேந்திரர் என்னும் மகானின் ஆன்மிக மற்றும் இசைப் பங்களிப்பு, இந்தியாவின் துறவிய மரபில் தனித்துவம் வாய்ந்தது. துறவியாக வாழ்ந்திருந்தாலும், அவரது பாடல்கள் காலத்தையும் இடத்தையும் தாண்டி மக்களிடையே ஆன்மிக விழிப்புணர்வை பரப்பும் சக்தியாக இருந்தன. ஆகையினால் இன்றும் சங்கீத உலகில் அவரது இசை உருப்படிகள், அனைத்து இசை கலைஞர்களால் பாடப்பட்டு வருகின்றன. இதுவரை கண்டறியப்பட்டுள்ள சதாசிவ பிரம்மேந்திரரின் 24 இசைக் கீர்த்தனைகளில் பகவத் கீதையின் முக்கிய தத்துவங்களான கர்மா (செயல்), பக்தி (அர்ப்பணம்), ஞானம் (அறிவு) ஆகியவற்றின் ஸாராம்ஸங்கள் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதே இந்த ஆய்வுக் கட்டுரையின் நோக்கம். இந்த ஆய்வில், கீர்த்தனைகளின் உள்ளடக்கங்களை பகவத் கீதையின் முக்கிய சொற்களுடன் ஒப்பிட்டு, இரண்டின் தத்துவ பொருத்தங்களையும் தொகுத்து வளங்கப்பட்டுள்ளது. பகவத் கீதையின் தத்துவார்த்தங்களை எளிதாக புரிந்துகொள்ளும் விதமாக இந்த கீர்த்தனைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன என்பதை வெளிக்கொணர்கிறது. மேலும் தனி நபர் வாழ்க்கையிலும், சமூகத்திற்கு அளிக்கும் பயன்பாடுகளையும், இன்றைய மக்களுக்கு வழிகாட்டுதலாக எவ்வாறு செயல்படுகின்றன என்பதையும் இந்த ஆய்வுக் கட்டுரையில் காணலாம்.

**திறவுச் சொற்கள்:** சதாசிவ பிரம்மேந்திரரின் கீர்த்தனைகள், பகவத் கீதையின் தத்துவம், பக்தி இசை, இசையும் தத்துவமும், அத்வைத சிந்தனைகள், பாடல் உள்ளடக்க ஆய்வு, நடைமுறை ஆன்மிகம்

***Abstract**:*

*The spiritual and musical contributions of the saint Sadasiva Brahmendra hold a unique place in India's ascetic tradition. Despite leading a life of renunciation, his compositions transcend time and geography, inspiring spiritual awakening among people across generations. Consequently, his musical works remain an integral part of Carnatic concerts performed by musicians worldwide, even today. This study focuses on how the core principles of the Bhagavad Gita—Karma (action), Bhakti (devotion), and Jnana (knowledge)—are reflected in the 24 known musical compositions of Sadasiva Brahmendra. By analyzing the lyrical content of these compositions in comparison with the key concepts of the Bhagavad Gita, the study highlights their philosophical alignment. It demonstrates how these compositions simplify and convey the profound teachings of the Bhagavad Gita, making them accessible to all. Additionally, the research explores the relevance of these compositions in individual lives and their broader societal benefits, emphasizing their enduring role as a guide for contemporary audiences.*

***Keywords:*** *Sadasiva Brahmendra's compositions, Bhagavad Gita philosophy, devotional music, music and philosophy, Advaita philosophy, Lyrical Analysis, Practical Spirituality*

**முன்னுரை**

பக்தியையும் இறை தத்துவத்தைப் பற்றியும் நமது வேதங்களும் வேதாந்தங்களும் உபநிடதங்களும் நமக்கு விளக்குகின்றன. பகவத்கீதையின் தத்துவம் அனைவருக்கும் பொருந்தக்கூடியது, அதன் யோக மார்க்கங்கள், அதாவது கர்ம யோகம், பக்தி யோகம், மற்றும் ஞான யோகம் ஆகியவை மனித வாழ்க்கையின் ஆதாரங்களாக உள்ளன. இந்த யோக மார்க்கங்கள் நம் செயல்கள், நம்பிக்கைகள், மற்றும் அறிவின் மீது வெளிப்படுகின்றன. சதாசிவ ப்ரம்மேந்திரரின் பாடல்களில் இத்தத்துவங்களின் ஆழம் பாமர மக்களுக்கும் புரியும்படி சுருக்கமாகவும், எளிமையாகவும், அழகாகவும் பாடப்பட்டுள்ளது. அவரது பாடல்கள், பக்தியை மையமாகக் கொண்டும் தெய்வீக நம்பிக்கைகளின் மேன்மையையும் வலியுறுத்துகின்றன. மேலும், பகவத்கீதையின் தத்துவங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க இசையை ஒரு ஊடகமாக பயன்படுத்தியுள்ளார். இந்த ஆய்வுக் கட்டுரையில், சதாசிவ பிரம்மேந்திரரின் பாடல்களின் கருத்துக்களை, பகவத் கீதையின் தத்துவங்களுடன் ஒப்பிட்டு, அதில் காணப்படும் ஒற்றுமைகளை தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.

**பகவத் கீதையின் சிறப்புக்கள்**

பகவத் கீதை உலகம் முழுவதும் அறிந்த ஒன்றாகும். வேதத்தினை பகுத்துக் கொடுத்த வ்யாஸரால் மஹாபாரதம் எழுதப்பட்டது. அந்த பாரதத்தின் நடுநாயகமாகத் திகழும் பகவத் கீதை சாமவேதத்தின் மஹாவாக்கியமான **தத் த்வம் அஸி** என்பதின் தத்வார்த்தங்களை நமக்கு கூறுகின்றது. 5000

ஆண்டுகளுக்கு முன், துவாபர யுகத்தில், மகாபாரதப் போரின் மத்தியில் பகவான் கிருஷ்ணனால் அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்ட கருத்துக்களே பகவத் கீதையாகும். அர்ஜுனன் எவ்வாறான மனநிலையை போரில் கையாள வேண்டும் என்பதனை விளக்குகிறார். அர்ஜுனனுடைய கேள்வியாகவும் கிருஷ்ணனுடைய பதிலாகவும் கர்மத்தை பற்றியும், பக்தியைப் பற்றியும், ஞானத்தை பற்றியும், 18 அத்தியாயங்களாக 700 ஸ்லோகங்களை கொண்டுள்ளது. பகவத்கீதையின் கருத்தக்கள், இவ்வுலகில் ஒரு மனிதன் வாழ்க்கை என்னும் போராட்டத்தில், மனதையும், வாக்கையும், உடலையும் எவ்வாறு கையாண்டு தனது கடமைகளை பக்தியுடனும் அறிவுப்பூர்வமாகவும் செயல்படுத்தி உயர்நிலையை அடைய வேண்டும் என்பதனை கீதை நமக்கு விளக்குகிறது. கீதையை அறிந்த மனிதன் தன்னை அறிந்தவனாகிறான். தனது கடமையை, பயன் கருதாது செய்கிறான், மூட பக்தியில்லாது, தூய பக்தியை உணர்கிறான். பக்தியில் திடமான நம்பிக்கை கொள்கின்றான். இப்பிறப்பினால் அடையும் சிறந்த வீடு பேற்றையும் மனிதன் அடைகிறான்.

### சதாசிவ பிரம்மேந்திரரின் இசை பங்களிப்பு

பதினெட்டாவது நூற்றாண்டை சார்ந்த சதாசிவ பிரம்மேந்திரர் தன்னுடைய யோக நிலையின் அனுபவ ஞானத்தை சமஸ்க்ருத மொழியில் கிரந்தங்களாக இயற்றியுள்ளார். அவை அனைத்தும் ப்ரம்ம சூத்திரத்தையும் வேதாந்த சித்தாந்த தத்துவங்களையும் தழுவிய கருத்துக்களைக் கொண்டதாக உள்ளன. யோக சூத்ர விருத்தி, ப்ரம்ம சூத்ர விருத்தி, ப்ரம்ம தத்வ பிரகாசிகை, அத்வைத ரசமஞ்சரி ஜெகத்குரு ரத்ன யோக சுதாகரா, ஆத்ம வித்யா விலாசம் மற்றும் பல அவர் இயற்றிய நூல்கள் ஆகும்.

இசை ஞானம் மிக்கவரான சதாசிவ ப்ரம்மேந்திரர், ராக தாளத்துடன் பாடல்களை இயற்றியுள்ளார். அவர் இயற்றிய பாடல்களில் இருபத்தி நான்கு பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. அவை இன்றும் தென்னிந்தியாவில் மிகவும் புகழ்பெற்ற பாடல்களாக விளங்குகின்றன. மேடைக் கச்சேரிகள், நாம சங்கீர்த்தனம், கதாகாலட்ஷேபங்களிலும், இவருடைய பாடல்கள் இன்றும் பாடப்பட்டு வருகின்றன. அப்பாடல்களில் "பரமஹம்ஸ" அல்லது "ஹம்ஸ" என்ற பதத்தை முத்திரையாகக் கொண்டுள்ளதை காணமுடிகிறது.

### சதாசிவ ப்ரம்மேந்திரரின் இசை உருப்படிகளில் பகவத்கீதையின் ஸாராம்ஸம்

சதாசிவ ப்ரம்மேந்திரர் இயற்றிய 24 கீர்த்தனைளையும் பகவத்கீதையின் ஸ்லோலங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டதில் காணப்படும் பொதுவான முக்கிய தத்துவக் கருத்துக்கள்

1. **அத்வைத தத்துவம்:** ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே எனும் தத்துவம்
2. **மனத்தின் இயல்பு:** மனதின் நிலையற்ற தன்மை
3. **புலனடக்கம்:** உயர்ந்த சிந்தனையை அடைய புலன்களைக் கட்டுப்படுத்துவதின் அவசியம்
4. **பக்தி:** தெய்வத்தின் மீது நம்பிக்கையும், சரணாகதியும்
5. **மன அமைதி:** உள் அமைதியைப் பெறுவதன் வழிகள்
6. **குரு பக்தி:** குருவின் மேல் மரியாதையும், அவரது வழிகாட்டுதலை கடைபிடித்தலும்
7. **வைராக்யம்:** உலகியலில் பற்றை துறத்தல்

8. **தியானம்**: மனதை ஒருமுகப்படுத்துதல்

### 1. அத்வைத தத்துவம்

உலகில் இரண்டு தன்மைகள் காணப்படுகின்றன: சத் (நிலைத்த தன்மை) மற்றும் அசத் (நிலையற்ற தன்மை). சத் என்பது மாறாத, நிலைத்த உண்மையாகவும், பரபிரம்மமாகவும் விளங்குகிறது. இது உலகின் உயிரோட்டமாக, அனைத்திலும் எப்போதும் நிறைந்திருக்கிறது. மனிதனுக்கு மட்டும் சத் எனப்படும் பரபிரம்மத்தை உணர தகுதியும் சாத்தியமும் உள்ளது, இதுவே மனித பிறவியின் உயர்ந்த இலக்காகும். சத் பற்றிய விசேஷ உண்மைகளை வேதங்கள் மற்றும் உபநிடதங்கள் விளக்குகின்றன. இதேபோல, துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மும்முனை தத்துவங்களும் ஆன்மாவை உணர்வதற்கான வழிமுறைகளை சுட்டிக்காட்டுகின்றன.

துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் ஆகிய மூன்று தத்துவங்களை உணவு உதாரணத்தின் மூலம் மேலும் தெளிவாக விளக்க முடியும்:

- துவைதம் (இருமைத் தத்துவம்): உணவு நம்மால் வெளிப்படையாக தனித்ததாக பார்க்கப்படும் நிலை. அதாவது, உணவு நம்மிடமிருந்து வேறுபட்டதாக இருக்கும். இதுவே இருமை (துவைதம்) ஆகும்.
- விசிஷ்டாத்வைதம் (தனித்துவமற்ற தன்மை): உணவு நம்மால் உண்ணப்பட்டு, நம்முடைய உடலின் ஒரு பகுதியாக உள்ள நிலையில், அது நம்முடன் தொடர்புடையதாகவும், ஆனால் தனித்த தன்மையையும் கொண்டதாகவும் இருக்கும்.
- அத்வைதம் (ஒருமைத் தத்துவம்): உணவு நம்முடைய உடலுக்குள் சென்று, நம்முடைய சரீரத்தின் மூல அங்கமாக மாறி, தனித்த தன்மையின்றி முழுமையாக ஒருமை நிலையை அடையும் நிலை.

துவைதம் இறைவனும் ஜீவனும் வேறு வேறு எனும் கருத்தை முன்வைக்கிறது, இது மத்வாசாரியரின் கொள்கை ஆகும். விசிஷ்டாத்வைதம், அத்வைதம் மற்றும் துவைதத்தின் அம்சங்களை தன்னுள் கொண்டது, இது ராமானுஜர் முன்வைத்த கொள்கையாகும். அத்வைதம், பிரம்மம் ஒன்றே நிலைத்த மெய்ப்பொருள் என விளக்குகிறது; இது உருவமற்ற, குணங்களற்ற, நிர்குண பிரம்மமாகும். மனித மனத்தின் உருவத்தைத் தேடும் இயல்பால் சகுண வழிபாடு எளிதாக செயல்படுகிறது, ஆனால் உருவமற்ற நிர்குணத்தை தன்னுள் உணர்வதே இறுதியான ஞானமாகும். இதை சாதிக்க, யோகத்தின் எட்டு நிலைகளான யமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி போன்றவை உதவுகின்றன. இந்த தத்துவங்கள் பிரம்மத்தின் மெய்ப்பொருளை தெளிவாக உணர்த்தும் உயர்ந்த கருத்துகளாக திகழ்கின்றன. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே என்பது அத்வைதம்.

இந்த அத்வைத்த தத்துவத்தையே சதாசிவ பிரமேந்திரரும் தனது கீர்த்தனைகளில் பாடி உள்ளதை காண முடிகிறது.

"சர்வம் பிரம்ம மயம்...",

"பூர்ண போதோஹம் சதாநந்த...",

"ஆனந்த பூர்ண போதோஹம்...",

"கேலதி பிண்டாண்டே...",

"தத்துவ ஜீவத்வம் பிரம்மணி..."

போன்ற பாடல்களில் ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றே என்ற அத்வைத்த கருத்துக்களை விளக்கி உள்ளார்.

பகவத் கீதையிலும் இக் கருத்துக்களை நான்காவது அத்தியாயத்தில் 24வது ஸ்லோகத்திலும், ஏழாவது அத்தியாயத்தில் 19ஆவது ஸ்லோகத்திலும் காணலாம்,

ப$_3$ஹூனாம் ஜன்மனாமன்தே$_1$ ஞானவான்மாம் ப்$_1$ரப$_1$த்$_3$யதே$_1$ |

வாஸுதே$_3$வ: ஸர்வமிதி$_1$ ஸ மஹாத்$_1$மா ஸுது$_3$ர்லப$_4$:||7.19 ||

ப்3ரஹ்மார்ப1ணம் ப்3ரஹ்ம ஹவிர்ப்3ரஹ்மாக்3னௌ ப்3ரஹ்மணா ஹுத1ம் |

ப்3ரஹ்மைவ தே1ன க3ன்த1வ்யம் ப்3ரஹ்மக1ர்மஸமாதி4னா ||4.24||

இந்த ஸ்லோகங்களின் மூலம் பகவான் க்ருஷ்ணர் கூறுவது, எண்ணற்ற பிறவிகளின் பின், உயர்ந்த ஞானத்தைப் பெறுகிறவரே உண்மையான தத்துவத்தை உணர்ந்து "வாஸுதேவன் (பரபிரம்மம்) தான் அனைத்தும்" என உறுதியாக நம்புகிறார். இப்படிப் பட்ட மகான்கள் உலகில் மிகவும் அபூர்வமானவர்கள்.

சதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகளும், பகவத் கீதையின் இந்த ஸ்லோகமும் ஒரே கருத்தை எடுத்துக்காட்டுகின்றன: ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே, இதை உணர்வதே மனித பிறவியின் உயர்ந்த இலக்கு. ஆன்மீக சாதனையின், பக்தி, தியானம் மற்றும் வைராக்யம் மூலம் இந்த உண்மை புரிந்து கொள்வதன் அவசியத்தை இவை மீண்டும் நினைவூட்டுகின்றன.

**2. மனதின் இயல்பு**

தொடர்ந்த எண்ண ஓட்டங்களையே மனம் என்கிறோம். மனமே மனிதனின் எண்ணங்கள் மற்றும் செயல்களின் காரணமாக உள்ளது. அது நிலையற்றதாகவும், எப்போதும் சஞ்சலதத்தன்மையையும் கொண்டுள்ளது. மனதை நிலைநிறுத்துவதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட பயிற்சி அவசியமாகின்றது.

சதாசிவ ப்ரம்மேந்திரர்,

"ஸ்திரதா நஹி நஹி ரே, மானஸ...",

என்ற பாடலில் மனதின் இயல்புகளையும் அதன் தீர்வுகளையும் விளக்கியுள்ளார்.

பகவத்கீதையிலும் இக்கருத்தை பகவான் க்ருஷ்ணர் மனதின் நிலையற்ற தன்மையை அடக்குவதற்கான முக்கியத்துவத்தை பல இடங்களில் எடுத்துரைக்கிறார். உதாரணமாக

ஆர்ஜுந உவாச

யோ(அ)யம்; யோக$_3$ஸ்த்$_1$வயா ப்$_1$ரோக்$_1$த$_1$: ஸாம்யேன மது$_4$ஸூத$_3$ன |

ஏதஸ்யாஹம் ந பஸ்யாமி சஞ்சலத்வாத் ஸ்தி$_2$திம் ஸ்தி$_2$ராம் ||**6.33**||

சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி$_2$ ப$_3$லவத்$_3$த்$_3$ருட$_4$ம் |

தஸ்யாஹம் நிக்$_3$ரஹம் மன்யே வாயோரிவ ஸுது$_3$ஷ்கரம் ||**6.34**||

இங்கு மனதின் இயல்புகளை கூறி, அதை கட்டுப்படுத்துவது கடினமான காரியமாக தோன்றுகிறது, என்று ஆர்ஜுநன் தெரிவிக்கிறார். இதற்கு விடையாக,

யதோ$_1$ யதோ$_1$ நிஶ்ச$_1$ரதி$_1$ மனஶ்ச$_1$ஞ்ச$_1$லமஸ்தி$_2$ரம் |

த$_1$த$_1$ஸ்த$_1$தோ$_1$ நியம்யைத$_1$தா$_3$த்$_1$மன்யேவ வஶம் நயேத்$_1$ ||**6.26**||

என்ற ஸ்லோகத்தில், மனித மனம் எப்படிப்பட்ட நிலையற்றதாக இருந்தாலும், அதைத் தொடர்ந்து மீண்டும் அடக்கி அத்மாவில் நிலைநிறுத்த வேண்டும் என்று க்ருஷ்ணர் கூறுகிறார்.

**3.புலனடக்கம்**

புலன்கள் எப்போதும் வெளிப்புற உலகில் ஈர்ப்புகளை உருவாக்கும். இந்த ஈர்ப்புகளைக் கட்டுப்படுத்தினால் மனதின் அமைதிக்கும், வாழ்கையில் உயர்ந்த சிந்தனைக்கும் வழிவகுக்கும்.

சதாசிவ ப்ரம்மேந்திரரும் புலனடக்கத்தின் முக்கியத்துவத்தை தன் பாடல்களில் விளக்கியுள்ளார்.

"சிந்தா நாஸ்திகில தேஷாம்...

ஸமதம கருணா சம்பூர்ணானாம்

ஸாது ஸமாகம் ஸங்கீர்ணானாம்

காலத் ரய ஜித கந்தர்ப்பாணாம்

கண்டித ஸர்வேந் த்ரியதர்ப்பாணாம்..."

என்ற பாடலில், அடக்கம் ஒடுக்கம் கருணை இவற்றால் நிரம்பியவர்களுக்கும், சாதுக்களின் நட்புறவு கொண்டவர்களுக்கும், முக்காலத்திலும் காமத்தை வென்றவர்களுக்கும், எல்லா இந்திரியங்களையும் அடக்கியவர்களுக்கும், கவலை இல்லை என்று சதாசிவ ப்ரம்மேந்திரர் பாடியுள்ளார்.

பகவத் கீதையிலும் புலனடக்கத்தின் முக்கியத்துவத்தை குறித்து பகவான் க்ருஷ்ணர் அர்ஜுநனுக்கு விளக்கியுள்ளார். உதாரணமாக

யதா$_3$ ஸம்ஹரதே$_1$ சா$_1$யம் கூ$_1$ர்மோங்கா$_3$னீவ ஸர்வஶ: |

இந்த்$_3$ரியாணீன்த்$_3$ரியார்தே$_2$ப்$_4$யஸ்த$_1$ஸ்ய ப்$_1$ரஞ்ஞா ப்$_1$ரதி$_1$ஷ்டி$_2$தா$_1$ ||2.58||

இங்கு, ஆமை எவ்வாறு தன் அங்கங்களை உட்புறமாக இழுத்துக்கொள்ளும் இயல்பைக் கொண்டதோ, அதுபோல மனிதனும் தன் புலன்களை கட்டுப்படுத்தினால் உயர் ஞானத்தை அடைய முடியும் என்று கூறுகிறார்.

**4.பக்தி:**

மனிதன் தெய்வத்தின் மீது கொண்ட முழுமையான அன்பும், நம்பிக்கையும், சரணாகதியும் பக்தி எனப்படுகிறது. மனிதனுடைய வாழ்க்கையில் இறையருளைப் பெறுவதற்கு பக்தி எளிமையானதும் உற்ற துணையாகவும் விளங்குகின்றது. இந்த பக்தி செய்வதற்கு மொழி, மதம், ஆண், பெண், பாமரன், பண்டிதன் என்ற இலக்கணங்கள் எதுவும் வேண்டியதில்லை. வாக்கால், உடலால், மனதால் என முக்கரணங்களால் மனதில் கொண்ட நம்பிக்கையின் மூலம் அன்பை வெளிப்படுத்தும் செயல்களையே இங்கு பக்தி என்று அழைக்கப்படுகின்றது.

சதாசிவ ப்ரம்மேந்திரர், தெய்வத்தை புகழ்ந்து பாடும் சில கீர்த்தனைகளில் பக்தியின் பாவத்தை காணமுடிகிறது.

"பஜரே கோபாலம் மானஸ..."

"பஜரே யதுநாதம் மானஸ..."

"பஜரே ரகுவீரம் மானஸ..."

போன்ற பாடல்களில் இறைவனை புகழ்ந்து பாடி தனது மனதின் பக்தி பாவத்தை செலுத்துகிறார் வெளிப்படுத்துகிறார்.

பகவத் கீதையிலும் க்ருஷ்ணர் பக்தியின் சிறப்பை விளக்குகிறார். உதாரணமாக,

ஸத$_1$த$_1$ம் கீ$_1$ர்த$_1$யன்தோ$_1$ மாம் யத$_1$ன்த$_1$ஸ்ச$_1$ த்$_3$ருட$_4$வ்ரதா$_1$: |

நமஸ்யன்த$_1$ஸ்ச$_1$ மாம் ப$_4$க்$_1$த்$_1$யா நித்$_1$யயுக்$_1$தா$_1$ உபா$_1$ஸதே$_1$ ||9.14||

எப்போதும் என்னை புகழ்ந்து, உறுதியான விரதத்தோடு மனதை திடமாக வைத்து, பக்தியுடன் நான் வழிநடத்தும் வழியை பின்பற்றுவோருமான நித்திய யோகிகள் என்னை வணங்குகின்றனர்.

**5.மன அமைதி**

மனிதன் உலக விஷயங்களால் கவரப்பட்டு அதனை அடைவதற்கு மன அமைதி இன்றி தவிக்கிறான் மன அமைதி என்பது எண்ணங்கள் அற்ற நிலை. அதாவது இந்த உலகியல் விஷயங்களின் பால் செல்லும் மனதை திசைதிருப்பி, இறைவன் பால் நிலைநிறுத்துதல். இதற்கு பகவானை அர்ச்சித்தல், நாம ஸ்மரணம் செய்தல், நாம சங்கீர்த்தனம் செய்தல், மௌன விரதம் முதலியவற்றால் சஞ்சலமான மனதை சாந்தி அடைய செய்வதே மனஅமைதி என்பதாகும். இது சித்திக்கும் முத்திக்கும் வழிவகுக்கின்றது.

சதாசிவ ப்ரம்மேந்திரர்,

"ஸ்மர வாரம் வாரம் மானஸ..."

"ப்ரதி வாரம் வாரம் மானஸ..."

என்ற பாடல்களில், இறைவனை புகழ்ந்து பாடியும், மீண்டும் மீண்டும் இறைவனை நினைவுகூர்ந்தும், மனதை இறைவன்பால் செலுத்தி, மனதை அமைதி அடைய செய்யுமாறு பாடியுள்ளார்.

பகவத் கீதையிலும் மன அமைதியின் விளக்கம் பல இடங்களில் காணலாம், உதாரணமாக,

ஆபூ$_1$ர்யமாணமச$_1$லப்_ரதி$_1$ஷ்டம் ஸமுத்$_3$ரமாப$_1$: ப்$_1$ரவிஸன்தி$_1$ யத்$_3$வத்$_1$ |

த$_1$த்$_3$வத்$_1$கா$_1$மா யம் ப்$_1$ரவிஸன்தி$_1$ ஸர்வே ஸஸான்தி$_1$மாப்$_1$னோதி$_1$ ந கா$_1$மகா$_1$மீ ||2.70||

யுக்$_1$த: க$_1$ர்மப$_2$லம் த்$_1$யக்$_1$த்$_1$வா ஸான்தி$_1$மாப்$_1$னோதி நைஷ்டி$_2$கீ$_1$ம் |

அயுக்$_1$த$_1$: கா$_1$மகா$_1$ரேண ப$_2$லே ஸக்$_1$தோ$_1$ நிப$_3$த்$_4$யதே$_1$ ||5.12||

என்ற ஸ்லோகங்களில், ஆசையை அடக்கியவனும், வினைப்பயனை துறந்தவனும் மன அமைதியை அடைகிறான் என க்ருஷ்ணர் கூறுகிறார்.

**6.குரு பக்தி:**

குரு எனபதில் "கு" என்றால் இருட்டு அதாவது அறியாமை என்பதாகும், "ரு" என்றால் அதனை அகற்றுபவர் என்பதாகும். அறியாமையை அகற்றி உண்மை அறிவை அடைய வழி வகுப்பவர் குரு எனப்படுகின்றார். இந்த வாழ்க்கையில் மன அமைதி அடைந்து இறைவன் பாதத்தை அடைய வேண்டுமென்றால் குருவின் வழி நடத்துதல் அவசியம் ஆகும். குருவிடம் ஞானத்தை பெற, அவருடைய தேவைகளை தானே அறிந்து அவருக்கு சேவைகள் செய்தல், அவரை மரியாதையுடன் வணங்குதல் மற்றும் அவர் கூற்றுப்படி வழிநடத்தல் ஆகியன குருபக்தி எனப்படுகின்றது.

சதாசிவ ப்ரம்மேந்திரர் தனது பாடல்களில் குரு பக்தியின் அவசியத்தை அனைத்துப் பாடல்களிலும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"ப்ரஹ்மை வாஹம்கில சத்குரு க்ருபயா…"

என்ற பாடலில், குருவின் அருளின் மூலமே உயர்ந்த ஞானத்தை அடைய முடியும் என்று கூறுகிறார்.

பகவத் கீதையில் குரு பக்தியை க்ருஷ்ணர் விளக்கும் ஸ்லோகம்,

தத் வித்₃தி ப்₃ரணிபாதே₃ன பரிப்₃ரஸ்நேந சேவயா |

உபதே₃க்ஷ்யந்தி தே₃ ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வத₃ர்ஸிந: ||4.34||

இதன் மூலம், குருவிடம் அணுகி பாதம் பணிந்தும், பயபக்தியுடன் அவரிடம் கேள்விகள் கேட்டும், அவருக்கு சேவைகள் செய்தும், ஞானத்தை அடைவாயாக என்று கூறுகிறார்.

**7.வைராக்யம்**

வைராக்கியம் என்பது வட மொழிச் சொல்லாகும். "விகதஹ ராகஹ வைராக்கியம்" என்பர். அதாவது உலக விஷயங்களில் பற்றில்லாது இருப்பது வைராக்கியம் என்பர். வைராக்கியம் என்பது மனதினுடைய ஒருவித நிலைப்பாட்டை குறிக்கிறது. சில சமயங்களில் வைராக்கியம் என்பதை நல்ல விஷயங்களுக்கு பயன்படுத்தும் பொழுது, இடைவிடாத பயிற்சி என்றும் கூறப்படுகிறது. மேலும் உலக விஷயங்களால் தனது ஆன்மீக வாழ்க்கை பாதிக்காது கட்டுப்பாட்டிற்குள் மனதை சம நிலையில் வைத்திருப்பதற்கும் வைராக்கியம் என்று கூறுவர். மனிதன் மோக்ஷ நிலையை அடைவதற்கு வைராக்கியம் என்ற பயிற்சி மிக அவசியமாகிறது.

"கேலதி மம ஹ்ருதயே ராம…"

"நஹிரே நஹி சங்கா காசின்…"

என்ற பாடல்கள் மூலம், மனதை ஒரு நிலைப்படுத்தி சித்தி அடைந்த சதாசிவ ப்ரமேந்திரர் தனது மனதிற்கு கட்டளையிடும் வகையில் வைராக்கியத்தை பற்றி பாடியுள்ளதை காணமுடிகிறது.

பகவத் கீதையிலும் வைராக்யத்தின் முக்கியத்துவத்தை க்ருஷ்ணர் எடுத்துரைக்கிறார்.

உத்₃த₃ரேதாத்மநாத்மாநம் நாத்மாநம் அவஸாதயேத் |

ஆத்மைவ ஹ்யாத்மனோ ப₃ந்து: ஆத்மைவ ரிபுராத்மன: ||6.5||

இங்கு, ஒருவர் தன்னை உயர்த்திக் கொள்ள தன்னையே வெற்றி கொள்ள வேண்டும் என்று க்ருஷ்ணர் அறிவுறுத்துகிறார்.

**8.தியானம்**

அஷ்டாங்க யோகத்தில் கூறப்பட்டுள்ள யம, நியம, ஆசனம், பிராணாயாமம், பிரத்யாஹாரம், தாரணை, தியானம், சமாதி போன்ற எட்டுவித பயிற்சிகளை மேற்கொண்டு யோகியானவன் உயர் நிலையை அடைகின்றான். இதில் கூறப்பட்டுள்ள தியானம் என்பது, மனதின் எண்ண ஓட்டங்களை ஒரு நிலைப்படுத்துவதற்கும், உயிர் சக்தியை தூண்டி விடவும், மேற்கொள்ளும் பயிற்சி முறையாகும். ஒரு மனிதன் உலகக் கவலைகளிலிருந்து விலகி தனது மனதை அமைதிபடுத்துவதில் கவனம் செலுத்துவதும் தியானம் எனப்படுகின்றது. மனதை ஒருமுகப்படுத்தி ‘‘ஓம்’’ என்ற பிரணவத்தையோ அல்லது அவரவர்களின் இஷ்ட தெய்வத்தின் பெயர், உருவம் மற்றும் மந்திரத்தை இடைவிடாது நினைவு கூறுதலும் தியானம் எனப்படும்.

சதாசிவ ப்ரம்மேந்திரர்,

‘‘மானஸ ஸஞ்சர ரே...’’

‘‘சர்வம் பிரம்ம மயம்...

ஸர்வத்ர ஸதா ஹம்ஸத்யானம்

கர்த்தவ்யம் போ முக்திநிதானம்’’

போன்ற பாடல்களில் தியானத்தின் முக்கியத்துவத்தை பாடியுள்ளார்.

பகவத் கீதையிலும் தியானத்தின் முக்கியத்துவம் கூறப்பட்டுள்ளது:

யோகீ$_3$ யுஞ்ஜீத$_1$ ஸத$_1$த$_1$மாத்$_1$மானம் ரஹஸி ஸ்தி$_2$த$_1$: |

ஏகா$_1$கீ$_1$ யத$_1$சி$_1$த்$_1$தா$_1$த்$_1$மா நிராஸீரப$_1$ரிக்$_1$ரஹ: ||6.10||

என்ற ஸ்லோகத்தில், தனிமையில் அமர்ந்து தியானம் செய்வதின் மூலம் மனதை உயர்த்த வேண்டும் என்று க்ருஷ்ணர் கூறுகிறார்.

**அட்டவணை 1: தத்துவ சிந்தனைகளும், தொடர்புடைய எடுத்துக்காட்டான ப்ரம்மேந்திரரின் பாடல்களும், பகவத்கீதை ஸ்லோகங்களும்.**

| தத்துவ சிந்தனைகள் | ப்ரம்மேந்திரரின் கீர்த்தனங்கள் (எ.கா) | பகவத்கீதையின் ஸ்லோகங்கள் (எ.கா) |
|---|---|---|
| **அத்வைத தத்துவம்** | ‘‘சர்வம் பிரம்ம மயம்...’’, | ப$_3$ஹூனாம் ஜன்மனாமன்தே$_1$ ஞானவான்மாம் ப்$_1$ரப$_1$த்$_3$யதே$_1$ \| |

<table>
<tr><td>ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே எனும் தத்துவம்</td><td></td><td>வாஸுதே$_3$வ: ஸர்வமிதி$_1$ ஸ மஹாத்$_1$மா<br>ஸுது$_3$ர்லப$_4$:||7.19 ||</td></tr>
<tr><td>மனத்தின் இயல்பு<br>மனதின் நிலையற்ற தன்மை</td><td>ஸ்திரதா நஹி நஹி ரே, மானஸ...”</td><td>யதோ$_1$ யதோ$_1$ நிஶ்ச$_1$ரதி$_1$ மனஶ்ச$_1$ஞ்ச$_1$லமஸ்தி$_2$ரம் |<br>த$_1$த$_1$ஸ்த$_1$தோ$_1$ நியம்யைத$_1$தா$_3$த்$_1$மன்யேவ வஶம்<br>நயேத்[1] ||6.26||</td></tr>
<tr><td>புலனடக்கம்<br>உயர்ந்த சிந்தனையை அடைய புலன்களைக் கட்டுப்படுத்துவதின் அவசியம்</td><td>“சிந்தா நாஸ்திகில தேஷாம் ஸமதம கருணா சம்பூர்ணானாம்...”</td><td>யதா$_3$ ஸம்ஹரதே$_1$ சா$_1$யம் கூ$_1$ர்மோங்கா$_3$னீவ ஸர்வஶ: |<br>இந்த்$_3$ரியாணீன்த்$_3$ரியார்தே$_2$ப்$_4$யஸ்த$_1$ஸ்ய ப்$_1$ரஞ்ஞா<br>ப்$_1$ரதி$_1$ஷ்டி$_2$தா$_1$ ||2.58||</td></tr>
<tr><td>பக்தி<br>தெய்வத்தின் மீது நம்பிக்கையும், சரணாகதியும்</td><td>“பஜரே கோபாலம் மானஸ...”</td><td>ஸத$_1$த$_1$ம் கீ$_1$ர்த$_1$யன்தோ$_1$ மாம் யத$_1$ன்த$_1$ஸ்ச$_1$<br>த்$_3$ருட$_4$வ்ரதா$_1$: |<br>நமஸ்யன்த$_1$ஸ்ச$_1$ மாம் ப$_4$க்$_1$த்$_1$யா நித்$_1$யயுக்$_1$தா$_1$<br>உபா$_1$ஸதே$_1$||9.14||</td></tr>
<tr><td>மன அமைதி<br>உள் அமைதியைப் பெறுவதன் வழிகள்</td><td>“ஸ்மர வாரம் வாரம் மானஸ...”</td><td>ஆபூ$_1$ர்யமாணமச$_1$லப்_ரதி$_1$ஷ்டம் ஸமுத்$_3$ரமாப$_1$:<br>ப்$_1$ரவிஶன்தி$_1$ யத்$_3$வத்$_1$ |<br>த$_1$த்$_3$வத்$_1$கா$_1$மா யம் ப்$_1$ரவிஶன்தி$_1$ ஸர்வே<br>ஸஶன்தி$_1$மாப்$_1$னோதி$_1$ ந கா$_1$மகா$_1$மீ ||2.70||</td></tr>
<tr><td>குரு பக்தி<br>குருவின் மேல் மரியாதையும், அவரது வழிகாட்டுதலை கடைபிடித்தலும்</td><td>“ப்ரஹ்மை வாஹம்கில சத்குரு க்ருபயா...”</td><td>தத் வித்$_3$தி ப்$_3$ரணிபாதே$_3$ன பரிப்$_3$ரஸ்நேந சேவயா |<br>உபதே$_3$க்ஷ்யந்தி தே$_3$ ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்த்வத$_3$ர்ஸிந:<br>||4.34||</td></tr>
<tr><td>வைராக்யம்<br>உலகியலில் பற்றை துறத்தல்</td><td>“நஹிரே நஹி சங்கா காசின்...”</td><td>உத்$_3$த$_3$ரேதாத்மநாத்மாநம் நாத்மாநம் அவஸாதயேத் |<br>ஆத்மைவ ஹ்யாத்மனோ பந்து: ஆத்மைவ ரிபுராத்மன:<br>||6.5||</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| **தியானம்**<br><br>மனதை ஒருமுகப்படுத்துதல் | "சர்வம் பிரம்ம மயம்...<br><br>ஸர்வத்ர ஸதா ஹம்ஸத்யானம்..." | யோகீ$_3$ யுஞ்ஜீத$_1$ ஸத$_1$த$_1$மாத்$_1$மானம் ரஹஸி ஸ்தி$_2$த$_1$: \|<br><br>ஏகா$_1$கீ$_1$ யத$_1$சி$_1$த்$_1$தா$_1$த்$_1$மா நிராஸீரப$_1$ரிக்$_1$ரஹ: \|\|6.10\|\| |

**முடிவுரை**

மனித மனம் இயல்பாகவே அலைபாயும்; தன்மை கொண்டது. காமம், க்ரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யம் எனும் ஆறு விதமான மனவிகாரங்கள், மனதின் அமைதியை தகர்க்கின்றன. மனதின் இந்த உறுதியற்ற தன்மை, கவலை மற்றும் துன்பம் போன்ற சிந்தனைகளால் மேலும் சீர்குலைந்து, அதன் இயல்பான அமைதி நிலையை இழக்கிறது. இந்த மன அலைபாய்விலிருந்து விடுபடவும், நிலையான நிம்மதியை அடையவும், சதாசிவ ப்ரம்மேந்திரர் தனது பாடல்களுக்குள் ஆழமான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளார். "ஹே! மனமே!" என்று அவர் தனது பாடல்களில் மனதிடம் உரையாடுவதுபோல் கூறி, அறிவுரைகளையும் கட்டளைகளையும் முன்வைக்கிறார்.

மனதை கட்டுப்படுத்தும் முறைகளாக தர்மம், கருணை, பக்தி, சரணாகதி, வைராக்கியம், ஞானம், நாமசங்கீர்த்தனம், குருபக்தி, ஜபம், தியானம், முக்திக்கான அணுகுமுறையையும் அவர் தனது பாடல்களில் பதிவு செய்துள்ளார். இக்கருத்துக்களே பகவத்கீதையிலும் கூறப்பட்டுள்ளது. இவை காலத்தால் மாறாதவை மனித வாழ்க்கையில் எக்காலத்திற்கும் பொருத்தமாகவும், பயனுள்ளதாகவும், மனிதனின் நிலையான முன்னேற்றத்திற்கும், சமுதாய நலனுக்கும், வழிகாட்டுதலாக உள்ளன.

**துணை நூல்பட்டியல்**

1. பிரபோதரன், சுகுமார். நெரூர் ஸ்ரீ சதாசிவ ப்ரம்மேந்திராள் சரிதை. அயக்ரீவா பதிப்பகம், 2016.
2. செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸய்யர், டாக்டர். ஸ்ரீ சதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள்., பொன் விழா டிரஸ்ட் வெளியீடு, 1979.
3. திரு. பெரியசாமி, நேரூர் ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரர் அருளியவை (பாகம் 1,2), சூர்யா பிரிண்டர்ஸ், கரூர், 2021.
4. சென்னை.த.பா. இராமசாமிப் பிள்ளை. சாம வேத சங்கிதை - பூர்வார்ச்சிகம். எவரெடி பதிப்பகம், 1935.
5. சித்பவானந்தா, சுவாமி. ஸ்ரீ மத் பகவத்கீதை. ஸ்ரீ ராமகிருஷ்ணா தபோவனம், திருப்பராய்த்துறை, திருச்சிராப்பள்ளி, 1962.
6. ராமஸுகதாஸ், சுவாமி. ஸ்ரீ மத் பகவத்கீதை-ஸாதகஸஞ்ஜீவிநீ (பாகம் 1,2), கீதாப்ரஸ், கோரக்பூர், 2015.
7. ஜயதயால் கோயந்தகா, சுவாமி. ஸ்ரீ மத் பகவத்கீதை-தத்வவிவேசனீ. கீதாப்ரஸ், கோரக்பூர், 1998.

8. சத்யவ்ரதானந்தா, ஸ்வாமி. நாதோபாசனா 2020 - சதாசிவ ப்ரம்மேந்திரர் க்ருதீஸ். தீ வாய்ஸ் ஆஃப் வேதாஸ், அக்ஷர வித்யா டிரஸ்ட், வலையொளி [https://bit.ly/Nadopasana2020]

## References


1. Sukumar, Prabodharan. *Nerur Sri Sadasiva Brahmendraal Charitai.*, Ayagriva Publications, 2016.
2. Srinivasa Iyer, Semmangudi R. *Sri Sadasiva Brahmendra's Keerthanas.*, Golden Jubilee Trust Publication, 1979.
3. Thiru. Periyasamy, *Nerur Sri Sadasiva Brahmendrar Aruliyavai (Part 1,2)*, Surya Printers, Karur, 2021
4. Ramasami Pillai, Chennai T. P. *Saama Veda Sangitai — Poorvaarchikam.*, Eveready Publishers, 1935.
5. Chidbhavananda, Swami. *Srimad Bhagavad Gita.* Sri Ramakrishna Tapovanam, Tirupparaithurai, Tiruchirappalli, 1962.
6. Swami Ramsukhdas. Srimad Bhagavad Gita - Sadhaka Sanjivini (Volumes 1 and 2), Gita Press, Gorakhpur, 2015.
7. Swami Jayadayal Goyandka. Srimad Bhagavad Gita - Tattva Vivechani, Gita Press, Gorakhpur, 1998.
8. Satyavratananda, Swami. "*Nadopasana 2020 — Sadasiva Brahmendra Krtis.*" *The Voice of Vedas*, Akshara Vidya Trust, 2020. YouTube, [https://bit.ly/Nadopasana2020].

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2025, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com